www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2022

**A**

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

I. பலவுள் தெரிக. 8 x 1 = 8

1. கூற்று 1 : தஞ்சைப் பெரிய கோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்கே.கோவிந்தசாமி கண்டறிந்தார்.

   கூற்று 2 : அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.

   அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு

   இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி

2. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது "கவிதைக் கிரீடம்" என்று போற்றப்படுவது.

   அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்

   இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

3. பொருத்தி விடை தேர்க.

   அ) விரியன் - 1. தண்டை

   ஆ)திருகுமுருகு - 2. காலாழி

   இ) நாங்கூழ்ப்புழு - 3. சிலம்பு

   ஈ) குண்டலப்பூச்சி - 4. பாடகம்

   அ) 3 4 2 1 அ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 4 1 3 2

4. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

   அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

5. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல் எது?

   அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் இ) மக்கள் அவை

6. 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' - யார் யாரிடம் கூறியது?

   அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

   இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

7. 'ஒழிதல்' - என்பதன் இலக்கணக்குறிப்பு

   அ) வினைத்தொகை ஆ) தொழிற்பெயர் இ) பண்புத்தொகை ஈ) மரூஉ

8. "இந்தியா 24 மணிநேரம்" - என்னும் குறும்படத்திற்கு இசை அமைத்தவர்

   அ) இளையராஜா ஆ) ஏ.ஆர்.இரகுமான் இ) யுவன் சங்கர் ராஜா ஈ) எம் எஸ் விசுவநாதன்

II. எவையேனும் நான்கனுக்கு விடையளி. 4 x 2 = 8

9. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?

10. ஒலோகமாதேவிச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்கள் யாவை?

11. "நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்" என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

12. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

13. செந்துறைப் பாடாண்பாட்டு - துறை விளக்கம் தருக.

14. சாழல் என்றால் என்ன?

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



**III. எவையேனும் நான்கனுக்கு விடையளி.** 4 x 3 = 12

15. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள் குறித்துக் குறிப்பு வரைக.
16. கலைச் சொல்லாக்கத்திற்கும், அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?
17. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக்குறவஞ்சி கூறுவன யாவை?
18. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
19. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
20. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?

**IV. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 2 = 6

21. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.
    அ) PERSONALITY ஆ) SMART PHONE
22. நிரப்புக :
    எழுத்து, சொல், __________ யாப்பு __________
23. விகுதியைக் கொண்டு ஆக்கப் பெயரைக் கண்டறிக.
    அ) வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றுவிடுவான். (ஆளி)
    ஆ) அறிவைத் தேடிப் போகுமிடம்;
    உலகம் அறிய உதவுமிடம். (அகம்)
24. உறுப்பிலக்கணம் தருக. (1 மட்டும்)
    அ) அயர்ந்து ஆ) பெற்ற
25. புணர்ச்சி விதி கூறுக (1 மட்டும்)
    அ) நீரோடை ஆ) மண்ணுடை

**V. பெருவினா: (அனைத்து வினாக்களுக்கும் விடையளி)** 2 x 5 = 10

26. 'கல்லும் கதை சொல்லும்' ! என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

    *(அல்லது)*

    சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.
27. சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

    *(அல்லது)*

    சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

**VI. மனப்பாடம்.** 1 x 6 = 6

28. 'சிற்றூரும்' எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை அடிபிறழாமல் எழுதுக.

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593